பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 30 வியாழக்கிழமை 16.10.2025 கதிர் 340

## இது ரகசியம் அல்ல!

மாகாண சபை தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகள் நேற்று யாழ்ப்பாணத்தில் கூடி ஆராய்ந்தன. இந்தக்கூட்டம்தமிழ்க்கட்சிகளின் ☞ 2


# மக்கள் அனைவரும் ஊழலை எதிர்த்தாலும் ஊழல் பட்டியலில் இலங்கையின் இடம் 121

## ஆணைக்குழுத் தலைவர் கவலை

நாட்டு மக்கள் அனைவரும் ஊழலுக்கு எதிர்ப்பு ஆனால் ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை 121 ஆவது இடத்தில் உள்ளது. ஒருசில அரச நிறுவனங்களுக்கு செல்லும் போது மேலதிகமாக பணத்தை கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் தமது வேலை விரைவாக முடிவடையும் என்று மக்கள் கருதுகிறார்கள். இந்நிலைமைமாறவேண்டும்என இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கானஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்தார்.

ஊழல் ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகள்குறித்துவடமத்திய மாகாண உள்ளுராட்சிமன்ற அதிகார சபைகளின் ☞ 2

# இஷாரா செவ்வந்தி உட்பட ஆறு பேர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்



பாதாள உலகக் குழு தலைவரான சஞ்சீவ குமார சமரரத்ன எனப்படும்'கனேமுல்ல சஞ்சீவா' கொலை வழக்கில் தொடர்புடைய முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவராகத் தேடப்பட்டுவந்த 'இஷாரா செவ்வந்தி' நேபாளத்தில் கைது செய்யப்பட்ட பின்னர், நேற்று மாலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்.

அவர் பயணித்த விமானம் மாலை 6.54 மணியளவில்கட்டுநாயக்கபண்டாரநாயக்கசர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. அவருடன் மேலும் 5 சந்தேகநபர்களும் அதே விமானத்தில் அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் கொழும்பு குற்றப்பிரிவு (ஸீஸீம்) அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். இந்த நடவடிக்கையை முன்னிட்டு சிறப்பு அதிரடிப்படை (றீவீய்) அதிகாரிகள் இருவர் நேபாளம் பயணம் செய்து, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துடன் (ஸீஞூம்) இணைந்து கைது நடவடிக்கையை ஒருங்கிணைத்திருந்தனர்.

25 வயதுடைய பிங்புர தேவகே இஷாரா செவ்வந்தி, ஹல்ஃப்ஸ்டார்ப் நீதிவான் மன்றத்தின் எண் 5இல் 'கனேமுல்ல சஞ்சீவா' சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் கொலைக்கான ☞ 2

# யாழ். பல்கலைக்கழக ஆளணியை நிரப்புவதில் திட்டமிட்ட பின்னடிப்பு

## அரசுத் தலைவரிடம் பல்கலை நிர்வாகம் நேரடியாக முறையீடு

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்திற்குத் தேவையானஆளணியைவழங்குவதற்குக் கல்விஅமைச்சும்பிரதமர்அலுவலகமும் பின்னடிப்பதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் நேரடியாக முறையிட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களிலும் கடந்த சில ஆண்டுகளில் மாணவர் சேர்க்கை அதிகரித்தபோதும் அதற்கேற்பதேவையானமனிதவளப்பணி நிலைகள்(cadre positions)கேட்கப்பட்டும் பலமாதங்களாகஅங்கீகரிக்கப்படவில்லை என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்களில் நான்கு ஆண்டுகளாக ஆட்கள் ஆட்சேர்ப்பு நிறுத்தப்பட்டிருந்தது.இந்தஆண்டுமுதல் கல்விசாரா பணியிடங்களுக்கு மட்டும் ஆட்சேர்ப்பு அனுமதி வழங்கப்படுகிறது. எனினும்யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் 2025 பெப்ரவரி மாதம் முதல் தனது ஆளணியை நிரப்புவதற்காக பலமுறை கல்வி அமைச்சிற்கு கோரிக்கை அனுப்பியபோதும்இதுவரைநேர்மறையான பதில் எதுவும் பெறப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிலும், நிர்வாகத் தவறொன்றின் காரணமாகயாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் கோரிய 124 பணியிடங்களில் ☞ 2

# முன்னாள் அமைச்சர் மனுஷவுக்குப் பிணை



ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நேற்றுக் கைது செய்யப்பட்ட முன்னாள் தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்காரா உடனடியாகவே பிணையில் விடுவிக்கப்பட்டார். ☞ 2

# பல கட்சி முறை ஜனநாயகத்தைக் காக்க அனைத்து அரசியல் கட்சிகளும் இணைக

## ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு

இலங்கையில் பல கட்சி முறை ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளையும் இணையுமாறும் அப்படி அனைத்துக் கட்சிகளையும் ஒருங்கிணைப்பதே தமது நோக்கம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. இந்த இலக்கை அடைவதற்காக ஐக்கிய மக்கள்சக்திக்கும்தமக்குமிடையிலான தூரத்தைக் குறைத்து, ஒற்றுமையுடன் செயற்பட உறுதி பூண்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இதற்கான பயணத்தின் போது அரசியல் கட்சிகளின் தனித்துவம் மற்றும் கொள்கைகளை பாதுகாக்கும் வகையில்செயற்படுவதுமுக்கியமாகும் என்றும், இருகட்சிகளுக்கிடையிலான பேச்சுக்காககுழுவொன்றைநியமிக்கும் யோசனைக்குதாம்இணங்குவதாகவும் ஐ.தே.க. தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று விசேட அறிக்கையொன்றை வெளியிட்ட ஐக்கிய தேசிய கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையின் ஜனநாயகப் பல் கட்சிமுறைமையைப்பாதுகாப்பதற்காக அனைத்துஅரசியல்கட்சிகளையும்ஒரே மேடைக்குக்கொண்டுவருவதேஜக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும். பல்கட்சி முறைமையைப் பாதுகாக்கும் போதுஅரசியல்கட்சிகளின்தனித்துவம் மற்றும் கொள்கைகளை பாதுகாக்கும் வகையில்செயற்படுவதுமுக்கியமாகும். இந்தநிலைப்பாட்டுக்குவருமாறு ☞ 2

# ஆளும்தரப்பின் நோக்கங்களுக்கு அமைய பொலிஸார் கேவலமாக செயற்படுகின்றனர்

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

ஆளும்தரப்பின்அரசியல்நோக்கத்துக்குஅமைவாகவே பொலிஸாரும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் கீழ்த்தரமாக செயற்படுகிறார்கள் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில்நேற்றுபுதன்கிழமைநடைபெற்றநிகழ்வில் கலந்துக்கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்னவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது. விசாரணைகட்டமைப்புக்களைஅரசியல் தலையீடுகள் ஆக்கிரமித்துள்ள நிலையில், நீதிமன்ற கட்டமைப்பு சுயாதீனமாகச் செயற்படுகிறது.

விடுதலை புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் புலம்பெயர் அமைப்புக்களின் நோக்கங்களுக்காக கீழ்த்தரமாக செயற்படுவதை ஆளும்தரப்பு தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

ஆளும்தரப்பின் அரசியல் நோக்கத்துக்கு அமைவாகவே பொலிஸாரும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளும் கீழ்த்தரமாக செயற்படுகிறார்கள்.இவ்வாறான செயற்பாடுகள் சுயாதீன பொலிஸ் சேவையை மலினப்படுத்துவதாகும்.

கணேமுல்லசஞ்ஜீவபடுகொலையின் ☞ 2

# முகமாலையில் நேற்று 40 மோ. குண்டுகள் மீட்பு

கிளிநொச்சி மாவட்டம், முகமாலை பகுதியில் காணி ஒன்றில் இருந்து நேற்று 40 மோட்டார் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விவசாயத்திற்காக நிலத்தை தயார் செய்தபோது காணி உரிமையாளர் குண்டுகளை கவனித்து தகவல் அளித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் கிளிநொச்சி நீதிவான் மன்றிலிருந்து ☞ 2

# தெற்குக் கடற்பரப்பில் திங்களன்று சிக்கியது 839 கி. போதைப்பொருள்

## சந்தேகநபர்கள் ஐவரும் கைது

இலங்கைகடற்படையின்நடவடிக்கைகளின்போது திங்கட்கிழமை தெற்குக் கடற்பரப்பில் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் 839 கிலோ கிராமுக்கும் அதிகமான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களில் ஹெரோயின், ஐஸ் மற்றும் குஷ் போதைப்பொருட்கள் அடங்கியிருந்தன. இத்தகைய 51 மூடைகள் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட இந்த போதைப்பொருள் தொகையை அவதானிப்பதற்காக, பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தாலும் ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளைத்தவிர வேறு எந்தக் கட்சியும் இதில் பங்கேற்கவில்லை. முக்கியமாகத்தமிழ்அரசுக் கட்சி இதில் பங்கேற்றிருக்கவில்லை. தமிழ் மக்கள் கூட்டணியினரும் பங்கேற்கவில்லை.

தமிழ் அரசியல் கட்சி ஒன்றின் தலைவர் மீது பாலியல் புகார்கள் எழுபப்பட்டு அவருக்கு எதிராக அவரது கட்சிக்குள் கொந்தளிப்பு நிலை உருவாக்கியுள்ளபோது அவரும் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் தமது தலைக் கறுப்பைக் காட்டி பிரச்சினையைத் தேடிக்கொள்ள வேண்டாம் என்று தமிழ் அரசுக் கட்சி கருதியிருக்கக்கூடும். ஆனால், சுகவீனம் காரணமாக தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தமிழ் மக்கள் கூட்டணி கூட்டத்தில் பங்கேற்பதாகத் தெரிவித்திருந்தபோது இறுதி நேரத்தில் ஒதுங்கிக்கொண்டதுஏன்என்பதுஉடனடியாகத் தெரியவரவில்லை.

மாகாணசபைத்தேர்தல்களைஉடனடியாக நடத்துவதற்கு உரிய அழுத்தங்களை பிரயோகிக்கும் அதேவேளை,அத்தேர்தலை இலக்காகக்கொண்டு தமிழ்த் தரப்புக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் பயணிக்கவேண்டும்எனஜனநாயகத்தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்கள் நேற்றைய தமதுகூட்டத்தில்வலியுறுத்தினார்கள். அதாவது கூட்டணி மாகாண சபைத் தேர்தலுக்கு ஒரு கூட்டணியைத் தேடுகின்றது என்று அதற்கு அர்த்தம். அது ஏற்கனவே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்திலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான தமிழ் மக்கள் பேரவையுடன் கொள்கைக் கூட்டணியில் இருந்தபோதும், தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போனால் மாகாண சபையில் தங்களுக்கு சரியான இடம் கிடைக்காது என்கிற அச்சத்தில் உள்ளது.

அதனால் இந்தக் கூட்டத்தின் இறுதி இலக்கு ஒன்று கொள்கைக் கூட்டணிக்குள் தமிழ் அரசுக் கட்சியை இழுத்து வருவது அல்லது கொள்கைக் கூட்டாளிகளை உதறித் தள்ளிவிட்டு தமிழ் அரசுக் கட்சியுடன் போய் ஒட்டிக்கொள்வது. ஏற்கனவே இந்தக் கூட்டணிக்குள் உள்ள ஒரு தலைவர் பாலியல் குற்றச்சாட்டுக்களில் சிக்கியுள்ள நிலையில், அதுவும் அவரது கட்சியினராலேயே பாலியல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள நிலையில் தமிழ் அரசு இந்தக் கூட்டணியுடன் தேர்தல் கூட்டு வைக்கப் போனால் அதன் எதிர்காலமும் அதோ கதிதான் என்பது அதன் தலைவர்களுக்கு உறைக்காமல் போனால் மாகாண சபையிலும் மக்களுக்கு திசைகாட்டிதான் வழிகாட்டியாக இருக்கும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

நேற்றைய கூட்டம் சுமார் இரண்டு மணிநேரம் வரை நீடித்தது. இச்சந்திப்பில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் ஊடகப்பேச்சாளரும் ஈபிஆர்எல்எவ் தலைவருமானசுரேஷ்பிரேமசந்திரன், ரெலோ தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், சமத்துவக் கட்சியின் தலைவர் சந்திரகுமார் மற்றும் முன்னாள் இணைந்த வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இச்சந்திப்பில் மாகாணசபைத்தேர்தலை உடனடியாகநடாத்துவதற்குஅழுத்தம்வழங்கு வதுடன் வலுவான அதிகாரப்பரவலாக்கத்தை பெற்றுக்கொள்வது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

மாகாணசபைத் தேர்தல்களை விரைவில் நடாத்துவதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ள நிலையில், அதனை முன்னிறுத்தி ஜனநாயக தமிழத் தேசியக் கூட்டணியினால் வடக்கில் ஒவ்வொரு பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த்தரப்புக்கள் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் அதனை முன்னிறுத்தி மேற்கொள்ளப்பட வேண்டிய நகர்வுகள் குறித்தும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

அதற்கமைய எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், வடமாகாண முன்னாள் முதலமைச்சருமான சவிக்கினேஸ்வரன் உள்ளடங்களாக ஒருமித்து இணைந்து பயணிக்க விரும்பும் தரப்பினருடனும்சந்திப்புக்களைநடத்துவதற்கு தாம் உத்தேசித்திருப்பதாகவும், எதிர்வரும் சந்திப்புக்களில் தமிழ் அரசுக் கட்சியினரும் பங்கேற்பர் என எதிர்பார்க்கிறார் எனவும் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்களுக்கு,குறிப்பாக தமிழ் மக்களுக்கு அவசியமான மிக முக்கிய கட்டமைப்பாக மாகாண சபைகள் காணப்படுவதாகவும், அவற்றுக்குரிய தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதனை ஏற்றுக்கொள்ளமுடியாதுஎனவும்சுட்டிக்காட்டிய அவர் அத்தேர்தல் உடனடியாக நடாத்தப்பட வேண்டியது அவசியம் என்பதே தமது நிலைப்பாடு என்றார்.

தன்னுடைய இந்தக் கொள்கைக் கூட்டணியினர் இவ்வாறு ஒற்றையாட்சியின் கீழான அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தந்த மாகாண சபைகளுக்காக கூட்டம் போட்டு ஆய்வு செய்துகொண்டிருந்தபோது கஜேந்திரகுமார் ஒற்றையாட்சியின் கீழான அரசமைப்பு இனிமேலும் வரக்கூடாது என்று வலியுறுத்தி நல்லூரில் நேற்று வேலன் சுவாமிகளைச் சந்தித்துப் பேசினார். இந்த விடயத்தில் சமயத் தலைவர்களைச் சந்தித்-து ஒற்றையாட்சியின் கீழான, அதாவது ரணில் 'மைத்திரி ஆட்சியில் முன்வைக்கப்பட்ட 'ஏக்கிய ராஜ்ஜிய' தீர்வை எதிர்க்கவேண்டும் என்று சமயத் தலைவர்களைத் தூண்டும் தொடரில் அவர் ஏற்கனவே ஆறு திருமுருகனைச் சந்தித்திருந்தார். இரண்டாவதாக வேலன் சுவமிகளைச் சந்தித்திருக்கிறார்.

ஒரு புறத்தில் ஒற்றையாட்சியின் கீழான 13இன் படியான மாகாண சபை வேண்டும் என்று வலியுறுத்தும் கூட்டம், மறுபுறத்தில் வராத புதிய அரசமைப்பு வரைவு 'ஏக்கிய ராஜ்ஜிய'வாகவரக்கூடாதுஎன்றுவலியுறுத்தும் சந்திப்பு, ஆனால் இரு தரப்புக்களும் இணைந்து ஒரு கொள்கைக் கூட்டணி. என்னவொரு அற்புதம்! இதற்கிடையில் இந்தக் கொள்கைக் கூட்டு உள்ளூராட்சி சபைகளில் அதிகாரத்தைப் பிடிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கூட்டு அல்லவென்றும் மக்கள் நம்பியேயாகவேண்டும். சிறப்பு! .

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## யாழ்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெறும் 7 பணியிடங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பின்னர் அந்தப் பிழையை சுட்டிக்காட்டி முழுமையான கோரிக்கைமீண்டும்சமர்ப்பிக்கப்பட்டதெனவும் பல்கலைக்கழகம் விளக்கியுள்ளது.

தமது கோரிக்கை ஏற்கப்பட்டு கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளது. அதனைத் தொடர்ந்து மூன்று மாதங்களாகத் தொடர்ந்து நினைவூட்டியபோதும் பிரதமர் அலுவலகத்திலிருந்து இதுவரை எந்தப் பதிலும் தமக்குக் கிடைக்கவில்லை என்பதையும் அரசுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் பல்கலைக்கழகநிர்வாகம்சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை பிற பல்கலைக்கழகங் களுக்குத் தேவையான ஆளணிகள் அண்மைக் காலங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதையும் பல்கலைக்கழக நிர்வாகம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு 124 வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டியுள்ள நிலையில் 7 ஆளணிக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதுவும் தவறுதலாக வழங்கப்பட்ட அனுமதி மட்டுமே என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்படாத காரணத்தால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அதிருப்தி அடைந்திருக் கிறது என்றும், மிக விரைவில் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வாய்ப்புள் ளதாகவும் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

'இது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை மட்டுமல்லாது, அரசின் நல்ல பெயரையும் பாதிக்கக்கூடிய ஒருநிலையாக மாறியுள்ளது. எனவே உடனடி

## இஷாரா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கியை எடுத்து வந்து கொடுத்தவர் என்று கருதப்படுகின்றார்.

இந்த துப்பாக்கிச் சூடு 2025 பெப்ரவரி 19 நீதிமன்ற வளாகத்திற்குள் நடந்தது. அதன்பின் இஷாரா செவ்வந்தி தலைமறைவாகிவிட்டார். அவர் பற்றிய நம்பத்தகுந்த தகவலைப் பெற முடியாமல் அதிகாரிகள் நீண்ட நாள்களாகத் திணறிவந்தனர்.

இருப்பினும்கடந்தமாதம்,குற்றப்புலனாய்வு திணைக்களம் இந்தோனேஷியாவில் கைது செய்த, 'கெஹெல்பத்தர பத்மே' எனப்படும் பாதாள உலகத் தலைவர் மற்றும் சிலரிடம் இருந்துகிடைத்ததகவல்களின்அடிப்படையில், இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்றிருப்பது தெரியவந்தது.

அதனைத்தொடர்ந்து இலங்கை'நேபாளப் பொலீஸார் இணைந்த விசாரணைகளைத் தீவிரப்படுத்தியதில் செவ்வந்தி சிக்கினார் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

'கனேமுல்ல சஞ்சீவா'வை நீதிமன்றத்திற்குள் வைத்துச் சுட்டுக் கொன்ற முதன்மைச் சந்தேகநபர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபரான செவ்வந்தி கைது செய்யப்பட்டமை சிறந்தது. போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் பாதாளக் குழுக்களின் பின்னணியை ஆளும்தரப்பு வெளிப்படுத்த வேண்டும்.அனைத்து விடயங்களுடனும் ராஜபக்சக்களைத் தொடர்புப்படுத்துவது முறையற்றது.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டு ஆளும்தரப்பு செயற்படுகிறது. எம்மை விமர்சித்துக் கொண்டு இருக்காமல் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள் என்று ஆளும்தரப்பிடம் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பல கட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துக்கட்சிகளையும்நாம்கோருகிறோம்.

அதேபோன்று, மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையில் உள்ள தூரத்தைக் குறைத்து, ஒற்றுமையுடன் செயற்படுவதற்காகவும் நாம் உறுதிபூண்டுள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில், எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்துகொள்வோம். ஏனைய அரசியல் கட்சிகளுடனும் ஐக்கிய தேசிய கட்சி பேச்சுவார்த்தைகளைநடத்தவேண்டியுள்ளது.

மேலும்,எமதுஇரண்டுகட்சிகளுக்கிடையில் பேச்சுவார்த்தைநடத்துவதற்காகஒருகுழுவை நியமிக்கும் யோசனைக்கும் நாம் இணக்கம் தெரிவிக்கின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி அண்மையில்வெளியிட்டஅறிக்கைகளையும், ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படைக் குறிக்கோளையும் கவனத்தில் கொண்டு எதிர்காலவேலைத்திட்டங்களை வகுக்கலாம்.

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களுக்கு தெளிவுப்படுத்தும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை வடமத்திய மாகாண திணைக்கள காரியாலயத்தில் நடைபெற்றது. ஆணையாளர் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல்குறித்தசர்வதேசதரப்படுத்தல்களுக்கு அமைய 180 நாடுகளில் இலங்கை 121 ஆவது இடத்தில் உள்ளது. அதற்கான காரணத்தை ஆராய வேண்டும். ஊழலுக்கு அனைவரும் எதிர்ப்பு என்கிறார்கள். ஆனால் ஊழல் தொடர்பான பட்டயலில் இலங்கை 121 ஆவது இடத்தில் உள்ளது. ஊழலுக்கு எதிரான செயற்பாடுமற்றும்நடவடிக்கைகளைஇலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவால் மாத்திரம்மேற்கொள்ள முடியாது. ஒட்டுமொத்த மக்களும்ஒன்றிணைந்துசெயற்படவேண்டும்.

அண்மையில் மோட்டார் வாகனத் திணைக்களத்தில் திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டோம்.அப்போதுதிணைக்களத்தின் பிரதி ஆணையாளர் நாயகத்தின் அறையில் இருந்த அலுமாரியில் இருந்து 41 இலட்சம் ரூபாவை கைப்பற்றினோம். இந்தப் பணத்தை அவர் அவரது வீட்டில் இருந்து கொண்டுவரவில்லை. திணைக்களத்தின் ஓர் அலகில் அந்த வாரத்துக்குரிய இலஞ்சப் பணமே அந்த 41 இலட்சம் ரூபாய்.

இவர்கள் வார இறுதியில் அதாவது ஞாயிற்றுக்கிழமைகளில் இலஞ்சமாக பெறும் மொத்த நிதியைப் பகிர்ந்துக்கொள்வார்கள்.அரச நிறுவனங்களுக்குச் செல்லும் போது மேலதிகமாகபணம்கொண்டுசெல்லவேண்டும் அப்போதுதான் தமது வேலை விரைவாகவும், இலகுவாகவும் முடியும் என்று பொது மக்கள் கருதுகிறார்கள். இந்தநிலைமைமாறவேண்டும் .ஊழலுக்கு எதிராகப் பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, அதற்குரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவின் செயற்பாடுகளைமாவட்ட மட்டத்தில்விரிவாக்குவதற்குரியநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நீதியமைச்சுடன் கலந்துரையாடியுள்ளோம். அரச நிர்வாகக் கட்டமைப்பில்முதன்மைஅலகாககாணப்படும் உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகள் பொதுமக்களுடன்நேரடியாகதொடர்புடையது. ஆகவே சிறந்த அரச நிர்வாகத்தை உள்ளூராட்சிமன்ற கட்டமைப்பில் இருந்து தொடங்கவேண்டும் - என்றார்.

## முகமாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)



பெறப்பட்ட உத்தரவின் பேரில், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் குண்டுசெயலிழக்க வைக்கும் பிரிவினால் 40 மோட்டார் குண்டுகளும் மீட்கப்பட்டன.

ஏற்கனவே நீணட காலமாகக் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர் மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்ட பகுதியிலேயே இந்தக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன என்று அந்தப் பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மீட்கப்பட்ட வெடிப்பொருட்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழக்கச் பிரிவினால் அழிக்கப்படவுள்ளனர். சம்பவம் குறித்து பளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டுவருகின்றனர்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேலில் விவசாயம் சார் வேலை வாய்ப்புக்களுக்கு ஆள்களைத் தெரிவு செய்வதில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக ஆணைக்குழு அமைச்சருக்கு எதிராகக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இது தொடர்பான விசாரணையில் வாக்குமூலம் அளிக்க ஆணைக்குழுவிற்கு வருகை தந்த மனுஷ, நேற்றுப் பிற்பகல் 2.31 மணியளவில் கைது செய்யப்பட்டார். அவர் கொழும்பு முதன்மை நீதிவான் மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அங்கு வழக்கை விசாரித்த நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்க உத்தரவிட்டார்.

## தெற்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜயசேகர மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட ஆகியோர் தங்கால மீன்பிடி துறைமுகத்துக்கு வருகை தந்தனர்.

புலனாய்வு சேவைகள் ஊடாக கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், கிழக்கு மற்றும் தெற்கு கடற்படை கட்டளைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்கள் மற்றும் படகுகள் ஒன்றிணைந்து பல நாட்களாக மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் விளைவாக, தெற்கு கடலில் மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையின்போது, அக்கடல் பகுதியில் கைவிடப்பட்டிருந்த மூடைகள் சோதனையிடப்பட்டுள்ளன.

இதன் போது, போதைப்பொருள் அடங்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்ட 51 மூட்டைகள் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த மூட்டைகள் தங்கால மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டு, பொலிஸ்போதைப்பொருள் தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட பரிசோதனையில், அதில் சுமார் 670 கிலோ 676 கிராம் ஐஸ் போதைப்பொருள்,

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# நாம் நிராகரித்த காணாமற்போனோர் அலுவலகத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார் அரசுத் தலைவர்

## உறவுகள் ஐ.நா. பிரதிநிதியிடம் குற்றச்சாட்டு

வலிந்து காணாமலாக்கப்படல்களால் தாமும் பாதிக்கப்பட்டதாக அரசுத் தலைவர் அநுரகுமார கூறுகின்ற போதிலும், அவர் ஆட்சிபீடமேறியதன் பின்னர் எம்மை சந்தித்து எமது நிலைப்பாட்டைக் கேட்டறியவில்லை. மாறாக நாம் நிராகரித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே அவர் முன்னெடுக்கிறார் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையர் அலுவலக அதிகாரி மற்றும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளிடம் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக ஐ.நாவின் கிளை அமைப்புக்களில் ஒன்றான வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் 29 ஆவது கூட்டம் கடந்த செப்டெம்பர் மாதம் ஜெனிவாவில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் செப்டெம்பர் 26 - 29 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கை விவகாரம் குறித்து ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக இலங்கையைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பில் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி மற்றும் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட ஆகியோர் சர்வதேச மன்னிப்புச்சபையினால் இந்தக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சிங்களப் பெண்கள் இருவர் மற்றும் தமிழ் பெண்கள் இருவர் என மொத்தமாக நால்வர் சுவிஸ்லாந்து தூதுரகத்தினால் ஜெனிவாவுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

அதன்படி மேற்கூறப்பட்டவாறு இலங்கை விவகாரம் ஆராயப்படுவதற்கு முன்னைய தினம் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான குழுவின் பிரதிநிதிகளுக்கும் இலங்கையில் இருந்து சென்ற பாதிக்கப்பட்ட தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்று நடைபெற்றது. இச்சந்திப்பின்போது மறுநாள் இலங்கை அரசாங்கத்திடம் கேட்கப்படவேண்டும் எனப் பாதிக்கப்பட்ட தரப்பினர் கருதும் கேள்விகள் தொடர்பில் ஐ.நா அதிகாரிகள் கேட்டறிந்துகொண்டனர்.

அவ்வதிகாரிகளிடம் தம்மால் முன்வைக்கப்பட்ட பல கேள்விகள் மறுநாள் கூட்டத்தில் இலங்கை ஆளும்தரப்பின் சார்பில் பங்கேற்ற நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையிலான குழுவினிடம் வினவப்பட்டதாக சுட்டிக்காட்டிய லீலாதேவி, இருப்பினும் இறுதிக்கட்டப்போரின்போது படையினரிடம் சரணடைந்தோரின் பெயர்ப்பட்டியல் மற்றும் குறிப்பாக பலர் சரணடைந்த 4 இடங்களுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரணைக்கு உட்படுத்தல் என்பன தொடர்பில் தாம் முன்மொழிந்த கேள்வி ஆளும்தரப்பிடம் கேட்கப்படாமை தமக்கு மிகுந்த கவலையளிப்பதாகத் தெரிவித்தார்.

அதேவேளை மேற்குறிப்பிட்ட கூட்டத்துக்கு அப்பால், பாதிக்கப்பட்ட தரப்பினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயராணையரின் அலுவலக அதிகாரியையும், இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் என்ற ரீதியில் தமது கோரிக்கைகள், உள்ளகப்பொறிமுறை மீதான நம்பிக்கை இழப்பு மற்றும் தற்போதைய ஆளும்தரப்பு இவ்விவகாரத்தைக் கையாளும் விதம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவ்வதிகாரிகளிடம் எடுத்துரைத்தனர்.

அதுமாத்திரமன்றி தாமும் வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டதாக அரசுத் தலைவர் அநுரகுமார கூறுகின்ற போதிலும், அவர் ஆட்சிபீடமேறியதன் பின்னர் தம்மைச் சந்தித்துத் தமது நிலைப்பாட்டைக் கேட்டறியவில்லை எனவும், மாறாகத் தாம் நிராகரித்த காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளையே அவர் முன்னெடுக்கிறார் எனவும் அவ்வதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட தரப்பினர் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

# வரிக் கட்டமைப்பில் உடன் மறுசீரமைப்பு அவசியம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு அதன் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், வர்த்தக கம்பனிகள் மற்றும் தனவந்தர்களுக்கு ஆதரவாகவும், மறுபுறம் போதிய வருமானத்தை ஈட்டித்தராததுமான தற்போதைய வரிக்கட்டமைப்பில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

நாட்டின் செயற்திறனற்ற வரிக்கட்டமைப்பு மற்றும் கல்வித்துறைக்கான போதிய நிதி ஒதுக்கீடு இன்மை என்பன தொடர்பில் 101 பக்க விரிவான ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், அது குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

இலங்கையில் 2022 ஆம் ஆண்டு உருவான தீவிர பொருளாதார நெருக்கடியில் நாட்டின் வரிக்கொள்கை மிகமுக்கிய வகிபாகத்தைக் கொண்டிருந்ததுடன் கல்வி மற்றும் ஏனைய பொதுச்சேவைகளுக்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஏற்படுவதற்கு வழிகோலியது. இந்நிலையில் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பு அதன் மனித உரிமைகள்சார் கடப்பாடுகளை வலுப்படுத்துவதற்கும், வர்த்தக கம்பனிகள் மற்றும் தனவந்தர்களுக்கு ஆதரவாகவும், மறுபுறம் போதிய வருமானத்தை ஈட்டித்தராததுமான தற்போதைய வரிக்கட்டமைப்பில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கை பல தசாப்தகாலமாக வருமானத்துக்காகக் காத்திருக்கவேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்திய பொருளாதாரக்கொள்கைகளின் பணயக் கைதியாக இருந்துவந்திருக்கிறது. அதனையடுத்து கல்வித்துறைக்கான செலவினங்களில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சி, உலகளாவிய அரங்கில் இலங்கையின் கல்வி நிலைவரத்தைப் பின்னடையச்செய்தது.

இதுகுறித்து ஆராய்வதற்காக இலங்கையின் பொருளாதார நிலவரம் மற்றும் அரச கல்விக் கட்டமைப்பின் பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக 70 க்கும் மேற்பட்டோரிடம் நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. அத்தோடு இலங்கையின் வரிக்கொள்கைகள் மற்றும் கல்வித்துறைக்கான செலவினங்கள் தொடர்பில் தரவு அடிப்படையிலான பரந்துபட்ட ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த கொள்கைசார் தோல்விகள் சிறுவர்களின் கல்விக்கான உரிமையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக காலனித்துவத்தில் இருந்து விடுபட்ட நாடுகளில் கல்வித்துறையில் பெரிதும் முன்னேற்றமடைந்திருந்த நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்த இலங்கையில் சுதந்திரத்தின் பின்னரான இரு தசாப்தங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.5 சதவீதமாகக் காணப்பட்ட கல்வித்துறைக்கான செலவினங்கள், கடந்த 2022 ஆம் ஆண்டு 1.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோன்று 2022 ஆம் ஆண்டு ஏப்ரலில் நாடு கடன்களை மீளச்செலுத்தமுடியாத வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படுவதற்கு குறைந்தளவு வரி வருமானமும் மிகமுக்கிய காரணமாக அமைந்தது. அதன்விளைவாக உருவான பொருளாதார நெருக்கடியை அடுத்து வேலை இழப்பு மற்றும் வருமான வீழ்ச்சி என்பன தீவிரமடைந்ததுடன் மனித உரிமைகளில் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவகையில் வாழ்க்கைச்செலவு வெகுவாக அதிகரித்தது.

மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதார வளர்ச்சி மாத்திரம் போதுமானதன்று என்பதை இலங்கையின் பொருளாதார நிலைவரம் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இந்நிலையில் செயற்திறன்மிக்க வரிக்கட்டமைப்பு ஒன்றை ஆளும்தரப்பு அறிமுகப்படுத்துவதுடன் அவ்வருமானத்தை சகல இலங்கையர்களும் பயனடையக்கூடியவகையில் கல்வி மற்றும் ஏனைய அரசசேவை வழங்கலுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அமைச்சரவை மறுசீரமைப்பு பற்றி நீர் வழங்கல் அமைச்சரின் விளக்கம்

அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பினை மேலும் வலுப்படுத்துவதற்காகவே அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டது. விருப்பு, வெறுப்பினை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவை மறுசீரமைக்கப்படவில்லை என தேசிய வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் பணிகளை நேற்று பொறுப்பேற்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீடு மற்றும் நீர் இவ்விரண்டும் அடிப்படை தேவையாகும். இந்த அடிப்படைத் தேவைகள் நாட்டு மக்களுக்கு கடந்த காலங்களில் முறையாக கிடைக்கப் பெற்றதா என்பது சந்தேகத்துக்குரியது.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடனும், தேசிய மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களின் நன்கொடையுடனும் புதிதாக வீடுகளை நிர்மானிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

அனைவருக்கும் தூய்மையான குடிநீர் வழங்குவது அரசாங்கத்தின் பிரதான கொள்கையாகும். இதற்கமைய முதற்கட்டமாக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் குடும்பங்களுக்கு புதிய நீர்விநியோகத்தை வழங்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை வினைத்திறனாக்குவதற்காகவே அமைச்சரவை மறுசீரமைக்கப்பட்டது. விருப்பு மற்றும் வெறுப்பினை முன்னிலைப்படுத்தி அமைச்சரவை மறுசீரமைக்கப்படவில்லை என்றார்.

# துறைமுக அமைச்சுக்கு புதிய செயலாளர்

துறைமுக மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளராக இலங்கை திட்டமிடல் சேவை விசேட தர அதிகாரியான டபிள்யு. டபிள்யு. எஸ். மங்கள நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்தோடு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர அதிகாரியான டபிள்யு. எம்.டீ.ரீ. விக்ரமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக்க சனத் குமாநாயக்கவினால் நேற்று புதன்கிழமை அரசுத் தலைவர் செயலகத்தில் வழங்கிவைக்கப்பட்டன.

டபிள்யு. டபிள்யு. எஸ். மங்கள இதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் திட்டமிடல் ( அனர்த்த முகாமைத்துவம்) பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியதோடு டபிள்யு. எம்.டீ.ரீ. விக்ரமசிங்க பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் மேலதிகச் செயலாளராக பணியாற்றியிருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வீட்டுக் கனவு

இலங்கை கடந்த பல தசாப்தங்களாக 'ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு' என்ற இலட்சியத்தைக் கனவாகவே தாங்கிக்கொண்டு வருகிறது. அரசுகள் மாறின, கொள்கைகள் மாறின, ஆனால் மக்களின் வீடற்ற நிலை மாறவில்லை. இன்று வீடு என்பது வெறும் சொத்து அல்ல – அது மனிதனின் மரியாதை, பாதுகாப்பு, சமூக நிலைத்தன்மை ஆகியவற்றின் அடித்தளமாகும். ஆனால், அந்த அடித்தளம் இலங்கையில் இடிந்து விழும் நிலையில் தான் உள்ளது.

### அடிப்படை உரிமை

2024 மக்கள்தொகை மற்றும் வீட்டு கணக்கெடுப்பு வெளிப்படுத்திய தரவுகள் இதன் தீவிரத்தை காட்டுகின்றன. கடந்த நாற்பத்தி இரண்டு ஆண்டுகளில் நாட்டின் வீட்டு எண்ணிக்கை இரட்டிப்பானாலும், மக்கள் வாங்கக்கூடிய அளவில் வீடுகள் குறைந்து விட்டன. 8.3 மில்லியனுக்கும் மேற்பட்ட கணக்கெடுப்பு பிரிவுகள் இருந்தாலும், அவற்றில் பல குடும்பங்கள் இன்னும் நம்பகமான ஓர் இல்லம்' இன்றி வாழ்கின்றன. மேற்குக் மாகாணம் – நாட்டின் பொருளாதார இதயம் – வீடில்லாதோரின் எண்ணிக்கையில் முதலிடத்தில் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

### வளர்ச்சியின் விலை

வேலைவாய்ப்புகளுக்காகநகரங்களுக்குள்மக்கள்அலைகிறார்கள். ஆனால், நகரங்களில் நிலமும் விலையும் உயர்ந்ததால், வீடுகள் கனவாக மாறிவிட்டன. பல்லடுக்கு கட்டடங்கள் ஒரு தீர்வாக கூறப்படினும், அவை செல்வந்தர்களின் வசம் தங்குகின்றன. நடுத்தர மற்றும் குறைந்த வருமான குடும்பங்களுக்கு அவை அணுக முடியாதவையாகவே உள்ளன. கொழும்பில் பல அடுக்குமாடி குடியிருப்புகள் பயன்பாட்டின்றி மூடப்பட்டிருக்கின்றன; வெளிநாட்டில் வாழும் இலங்கையர்கள் சொந்தமாக்கியவை அவை. இதனால் சந்தை விலை குறைந்தாலும், வீடற்றோரின் நிலையில் மாற்றமில்லை.

### மலையகமும் வடகிழக்கும் - புறக்கணிப்பு

மலையகம் மற்றும் வடகிழக்கு மாகாண மக்கள் இன்னும் மோசமான நிலையில் உள்ளன. மலையகத்தில் 2% மக்கள் இன்னும் 'எஸ்டேட்' குடியிருப்புகளில் தங்கியுள்ளனர். நீர், மின், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகளும் இன்றி வாழும் இவர்கள் மீது அரசின் கவனம் குறைவாகவே உள்ளது.

2017ஆம் ஆண்டு திருத்தப்பட்ட தேசிய வீட்டு கொள்கை '2025க்குள் அனைவருக்கும் வீடு' என்ற இலட்சியத்தை முன்வைத்தது. ஆனால், 2025 நெருங்கும் வேளையில், நிலைமை மாறவில்லை. தேசிய வீட்டு அபிவிருத்தி ஆணையம் (NHDA) 9 இலட்சம் வீடுகள் பற்றாக்குறையாக இருப்பதை ஏற்றுக்கொள்கிறது. சில வெளிநாட்டு உதவிகளும் கடன்களும் இருந்தாலும், அவை பெரும்பாலும் காகிதத்தில் மட்டுமே நிற்கின்றன.

நடந்து முடிந்த திட்டங்களின் பலன்கள் மக்களிடம் சென்று சேரவில்லை. அனுமதி நடைமுறைகளில் தாமதம், ஊழல், கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவை நடுத்தர மக்களை வீடமைப்பிலிருந்து தள்ளியுள்ளன. முந்தைய காலங்களில் முதன்முதலாக வீடு கட்டுவோருக்கு அரசு வழங்கிய நன்மைகள் இன்று காணமல் போய்விட்டன.

### புதிய சிந்தனை தேவை

இப்போது தேவையானது வாக்குறுதிகள் அல்ல, நடைமுறையில் செயல்படும் தீர்வுகள். அரசு உடனடியாக வீட்டு கொள்கையை மறுஆய்வு செய்ய வேண்டும். நகரங்களில் உயர்மாடி வீடுகள் ஒரு வழியாக இருந்தாலும், கிராமப்புறங்கள் மற்றும் மலைப்பாங்குகளில் தனித்தனி திட்டங்கள் தேவை. அரசாங்கம் கட்டுமான அனுமதி முறைகளை எளிதாக்கி, குறைந்த விலையில் வீடுகள் அமைக்கும் நிறுவனங்களுக்கு ஊக்குவிப்பளிக்க வேண்டும்.

வீடு என்பது விற்பனைக்கான பொருளாக அல்ல, மனித வாழ்வின் அடிப்படை உரிமையாகக் கருதப்பட வேண்டும். கல்வி, சுகாதாரம் போலவே 'வீடு' என்பதும் அரசின் பொறுப்பாக இருக்க வேண்டும். அரசாங்கங்கள் அரசியல் பலன்களைப் பொருட்படுத்தாமல், மக்களின் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

இலங்கை இன்று பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறது. ஆனால் அதைவிட ஆழமான நெருக்கடி ஒன்று நம்மைச் சூழ்ந்துள்ளது – அது 'வீடற்ற வாழ்வின் நெருக்கடி'. நாட்டின் எதிர்காலத்தை நிலைநிறுத்த, ஒவ்வொருவருக்கும் தலையணை வைக்கும் இடம் அளிப்பது அரசின் முதல் கடமை ஆகும். 'ஒரு நாடு, ஒரு இல்லம், ஒரு மரியாதை' என்ற அடிப்படையில் புதிய இலங்கை உருவாக வேண்டிய நேரம் இது.

# பெருந்தோட்ட தொழிலாளரின் சம்பளம்: நாளை கூடுகிறது சம்பள நிர்ணய சபை

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரம் தொடர்பான பேச்சுக்காக சுமார் ஒரு வருடத்தின் பின்னர் சம்பள நிர்ணய சபை நாளை வெள்ளிக்கிழமை கூடுகிறது. தொழில் ஆணையாளர் நாயகம் வட்டலியத்த தலைமையில், கொழும்பிலுள்ள தொழில் திணைக்களத்தில் பிற்பகல் 1 மணியளவில் கூடவுள்ளது.

சம்பள நிர்ணய சபையின் தொழில் அமைச்சின் நியமன உறுப்பினர்கள், தொழிற்சங்கங்கள் சார்பில் இலங்கை தொழிலாளர் காங்ரஸின் சட்ட ஆலோசகர் மாரிமுத்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் முத்துக்குமார், விவசாய தோட்ட தொழிலாளர் காங்ரஸ் சார்பில் கிருஸ்ணசாமி, அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கிட்ணண் செல்வராஜா, இலங்கை செங்கொடி சங்கத்தின் சார்பில் அதன் ஆலோசகர் மேனகா கந்தசாமி மற்றும் பி.ஜி. சந்திரசேன உள்ளிட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளும், தொழில் தருநர் சார்பில் பெருந்தோட்டக் கம்பனிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மஸ்கெலியா - பிரவுன்ஸ்விக் தோட்டத்தைச் சேர்ந்த பெருந்தோட்டத் தொழிலாளியான பாலகிருஷ்ணன் தேவிகா மற்றும் செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி ஆகியோரால் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. குறித்த மனு மீதான விசாரணைகளின் பின்னர் செப்டெம்பர் 19 நீதிமன்றத்தால் விசேட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்கமைய பெருந்தோட்டக் கம்பனிகளுடன் முன்னெடுக்கப்பட வேண்டிய பேச்சு அடுத்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யுமாறும், நவம்பர் 20ஆம் திகதிக்குள் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளத்தை தொழில் ஆணையாளர் அறிவிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுவை தாக்கல் செய்திருந்த இலங்கை செங்கொடி சங்கத்தின் ஆலோசகர் மேனகா கந்தசாமி, 'கடந்த ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. தொழிற்சங்கமாக வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்பதால் செங்கொடி சங்கத்தின் சார்பில் நாம் மனுதாக்கல் செய்தோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1350 ரூபா சம்பளம் தீர்மானிக்கப்பட்ட போது நாமும் சம்பள நிர்ணய சபையின் அங்கத்தவர்களாக இருந்தோம். செங்கொடி சங்கம், ஜே.வி.பி. தொழிற்சங்கம் மற்றும் இலங்கை தொழிற்சங்கங்களின் சம்மேளனமும் இந்த தீர்மானத்துக்கு எதிராகவே வாக்களித்தன.

அதேவேளை 65க்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் இந்த தீர்மானத்துக்கு எதிராக ஆட்சேபனைகளை சம்பள நிர்ணயசபைக்கு அனுப்பியிருந்தனர். ஆனால் இவை எவையுமே கவனத்தில் கொள்ளப்படாது 1350 சம்பள யோசனை நிறைவேற்றப்பட்டது. இது வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட போதிலும், இந்த சம்பளம் ஒருபோதும் தொழிலாளர்களுக்கு போதுமானதாக இருக்காது எனக் கூறி மீண்டும் சம்பள நிர்ணயசபையை கூட்டுமாறு கடந்த ஆளும்தரப்பிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தோம். இந்த ஆளும்தரப்பிடமும் இதற்கான கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், அதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.ம

குறிப்பிட்டவொரு தொகையை அதிகரிக்குமாறு நீதிமன்றத்தால் உத்தரவிட முடியாது. எனவேதான் சம்பள நிர்ணய சபையை கூட்டுவதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறும், தொழில் அமைச்சரால் வாழ்க்கை செலவுக்கு ஏற்ற ஒரு சம்பளத்தை நிர்ணயித்து அதற்கான கொள்கை பிரகடனமொன்றை முன்வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடுமாறு கோரியே மனு தாக்கல் செய்துள்ளோம். அதற்கமைய ஒக்டோபர் 30க்குள் பேச்சு அனைத்தும் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றும், நவம்பர் 20க்கு முதல் சம்பள உயர்வை அறிவிக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. குறித்த காலக்கெடுவுக்குள் சம்பள உயர்வு அறிவிக்கப்படாவிட்டால் ஜனவரி 20 எம்மை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

இந்நிலையில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 12ஆம் திகதி சம்பள நிர்ணய சபை கூடிய போது 1350 ரூபா அடிப்படை சம்பளமும், 350 ரூபா உற்பத்தி திறன் கொடுப்பனவையும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் தற்போது மீண்டும் சம்பள பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சம்பள நிர்ணய சபை கூட்டப்பட்டுள்ளது.

# உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்காததற்கு சிவில் அமைப்புக்கள் அதிருப்தி

ஆளும்தரப்பு ஏற்கனவே வாக்குறுதி அளித்ததன் அடிப்படையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காமை குறித்தும், அதுபற்றி தம்முடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமை குறித்தும் சிவில் சமூக அமைப்புக்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளன.

இலங்கையில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிவதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தி நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான வகையில் தென்னாபிரிக்காவில் இயங்கிய ஆணைக்குழுவை ஒத்த வகையில் உள்நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகள் கடந்த அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

குறிப்பாக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பது குறித்து கடந்த ஆளும்தரப்பு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், புத்திஜீவிகள், மதத்தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பிருடன் கட்டம் கட்டமாகப் பல்வேறு சந்திப்புக்களை நடாத்தி, அவர்களிடமிருந்து முன்மொழிவுகளைப் பெற்றிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் இனவாதம் மற்றும் மதத்தீவிரவாதம் காரணமாக இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைப் புலன்விசாரணை செய்வதற்குரிய உண்மை மற்றும் மீளிணக்கத்துக்குக்கான ஆணைக்குழுவின் செயற்பாடு விரிவுபடுத்தப்படும் எனத் தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தது. அதுமாத்திரமன்றி ஆட்சிபீடமேறியதன் பின்னரும் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் சிலர் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் தற்போதுவரை அதனை முன்னிறுத்திய எந்தவொரு நடவடிக்கையையும் ஆளும்தரப்பு முன்னெடுக்கவில்லை எனவும், இதுபற்றி சிவில் சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடல்கள் எதனையும் நடாத்தவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள தேசிய சமாதானப்பேரவையின் நிறைவேற்றுப்பணிப்பாளரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான கலாநிதி ஜெஹான் பெரேரா, இதுகுறித்து தனது அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அதேவேளை பல்வேறு சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றிலும் இவ்விவகாரம் குறித்து ஆராயப்பட்டதாகவும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விவகாரத்தில் மாத்திரமன்றி சுற்றுலாத்துறையில் பால்புதுமையின சமூகத்தின் பங்கேற்பை ஊக்குவித்தல் மற்றும் மாணவர்களுக்கு உடலியல் ரீதியான தண்டனைகள் வழங்குவதை முடிவுக்குக்கொண்டுவரல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பிலும் தம்முடன் கலந்துரையாடப்படாமை குறித்து அவர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியதாகவும் அறியமுடிகின்றது.

# மைசூர் பருப்பைக்கூட உண்ணாதீர் என்றோர் இன்று இந்தியாவுடன் நடப்பு பாராட்டுகின்றனர்

## ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குத்திக்காட்டு

இந்திய எதிர்ப்பு கொள்கையைப் பின்பற்றிய மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இந்தியாவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை இன்னும் வெளிப்படுத்தவில்லை. மைசூர் பருப்பினைக் கூட உண்ண வேண்டாம் என இனவாதம் பரப்பி 60 000 இளைஞர், யுவதிகளை கொன்று குவித்த ஜே.வி.பி. இன்று இந்தியாவுடன் நட்பு பாராட்டிக் கொண்டிருக்கிறது. அதனை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் கடந்த காலங்களில் இவர்கள் இவற்றுக்கு வெளியிட்ட எதிர்ப்பினை நினைவுபடுத்துகின்றோம் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிறுவனகள் ஊடாக இலாபம் கிடைக்க வேண்டுமெனில் அவற்றை தனியார் மயப்படுத்த வேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். காலம் காலமாக நாமும் இதனையே வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை அரசுத் தலைவர்க்கு நினைவுபடுத்துகின்றேன். கடந்த காலங்களில் நாம் இதற்கான நடவடிக்கைகளை எடுத்த போது ஜே.வி.பி. தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து அனைத்துக்கும் இடையூறுகளை ஏற்படுத்தின. ஆனால் இன்று வெட்கமின்றி அவர்களே இதனைக் கூறுகின்றனர்.

இந்திய எதிர்ப்பு கொள்கையைப் பின்பற்றிய இவர்கள், இந்தியாவுடன் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்தை இன்னும் வெளிப்படுத்தவில்லை. மைசூர் பருப்பினைக் கூட உண்ண வேண்டாம் என இனவாதம் பரப்பி 60 000 இளைஞர், யுவதிகளை கொன்று குவித்த ஜே.வி.பி. இன்று இந்தியாவுடன் நட்பு பாராட்டிக் கொண்டிருக்கிறது. நாம் இதனை எதிர்க்கவில்லை. ஆனால் கடந்த காலங்களில் இவற்றை செய்வதற்கு இவர்கள் இடமளித்திருந்தால் இன்று மலேசியா, சிங்கப்பூரைப் போன்று சிறந்த பொருளாதார நிலைமையை அடைந்திருக்க முடியும்.

எவ்வாறிருப்பினும் அநுர தலைமையிலான ஜே.வி.பி. இப்போதாவது யதார்த்தத்தை புரிந்து கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. தற்போது ஊழல், மோசடிகள் தொடர்பில் பலரும் கைது செய்யப்படுகின்றனர். அவை அனைத்தும் எமது ஆட்சி காலத்தில் எம்மால் அளிக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைவானதாகும். மாறாக இந்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்ல. தேர்தல் காலங்களில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மீது மத்திய வங்கி பிணை முறி மோசடி , பட்டலந்த சித்திரவதை முகாம் தொடர்பிலேயே இவர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். ஆனால் சிறிதொரு குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

ரணில் விக்கிரமசிங்கவையே நாம் கைது செய்து விட்டோம் என பிரசாரம் செய்வதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார். தற்போது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டுள்ளார். இனி ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அந்த செய்தியைக் கொண்டு ஆளும்தரப்பு அதன் பிரசாரங்களை முன்னெடுக்கும். இவ்வாறு ஒவ்வொருவராககைதுசெய்யப்படுவதும், அதுதொடர்பில்பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதும் அரசாங்கத்தால் அரங்கேற்றப்படும் திரைப்படமாகும். இலங்கை வரலாற்றில் மிகவும் பலவீனமான அரசாங்கமே தற்போது காணப்படுகிறது என்றார்.

# எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள நாம் தயார்

## ஐக்கிய மக்கள் சக்தித் தலைவர் அறிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் பயணத்தில் மக்களுடன் இருப்பதால், எந்தவொரு தேர்தலுக்கும் முகம் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். ஆளும்தரப்பு தேர்தலை நடத்த தீர்மானித்தால், அதற்கான திகதியை உடனடியாக அறிவிக்க வேண்டும். எந்தவொரு கருத்துக் கணிப்புக்கும் எந்தவொரு பலப்பரீட்சைக்கும் முகம் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கண்டி, அஸ்கிரிய மகா விகாரைக்கு நேற்று புதன்கிழமை விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, அஸ்கிரிய மகா விகாரையின் அனுநாயக தேரர் நாரம்பனாவே ஆனந்த தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை வங்குரோத்தடையச் செய்தோருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்திதான் உயர் நீதிமன்றத்திற்குச் சென்றது. அதன்மூலமே குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டார்கள். மின்சாரக் கட்டண அதிகரிப்பை ஆளும்தரப்பு கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து கொடுத்த அழுத்தமே காரணம்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்த அரசாங்கத்தின் மின்சாரக் கட்டண அதிகரிப்பு முயற்சிக்கு ஐக்கிய மக்கள் சக்தி எதிர்ப்பு தெரிவித்தது. கட்டணத்தை 33 சதவீதத்தால் குறைக்கும் வரை மக்களுடன் இணைந்து போராடுவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் வர்த்தகத்தை இல்லாதொழிப்பது ஒரு நல்ல விடயமாகும். இந்தப் பணியை யார் செய்தாலும், அதனால் நாட்டுக்கு நல்லது நடப்பதாக இருந்தால் அதற்கு ஆதரவளிப்போம் என்றும் எதிர்க்கட்சி தலைவர் கூறினார். பாடசாலைக் கட்டமைப்பில் போன்ற போதைப்பொருள்கள் பரவுவதை தடுத்து நிறுத்துவது மிகவும் அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மேலும், நுண்ணியல் பொருளாதாரத் துறையினருக்கு எந்த நிவாரணமும் கிடைக்காததால், இதே வழியில் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிக்காவிட்டால், 2028இல் கடனைத் திருப்பிச் செலுத்துவது சிக்கலுக்குரியதாக மாறும் அபாயம் உள்ளது. ஆகவே, விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியம் என அவர் மேலும் தெரிவித்தார்.



## தெற்குக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

156 கிலோ 542 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 12 கிலோ 36 கிராம் குஷ் போதைப்பொருள் உள்ளடங்கியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர, பொதுப் பாதுகாப்புக்கும் தேசிய பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள போதைப்பொருள் தொல்லையிலிருந்து நாட்டின் எதிர்கால தலைமுறையை விடுவிப்பதற்கான அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கமைய தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். அத்துடன் இந்த நச்சுப் போதைப்பொருளை ஒழிப்பதற்காக 'நாடு ஒன்றிணைந்து தேசிய நடவடிக்கை' என்ற தேசிய வேலைத்திட்டமும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், தேசிய பாதுகாப்புக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு மற்றும் இடைத்தொடர்பு மூலம், தேசிய பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் போதைப்பொருட்கள் உட்பட எந்தவொரு சட்டவிரோதப் பொருட்களையும் கடல் மார்க்கமாக நாட்டிற்குள் கொண்டுவர எந்தவொரு வாய்ப்பும் இல்லை என்றும், மீன்பிடி நடவடிக்கைகள் என்ற போர்வையில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் அல்லது அதற்கு துணைபோகும் எந்தவொரு முயற்சியும் வெற்றியடைய அனுமதிக்கப்படாது என்றும், இத்தகைய கடத்தல்களை ஒடுக்குவதற்காக ஒரு ஒருங்கிணைந்த திட்டத்துடன் தொடர்ந்து நடவடிக்கைகளை முன்னெடுப்போம்" ' என்றார்.

அத்துடன், இலங்கை கடற்படை ஏனைய தரப்பினருடன் இணைந்து, தீவின் கடற்கரை மற்றும் கடற்பரப்பை உள்ளடக்கி மேற்கொள்ளும் தீவிரமான போதைப்பொருள் வேட்டை நடவடிக்கைகளால், நிலப்பகுதிக்கு கொண்டுசெல்ல முடியாமல் போதைப்பொருள் கடத்தல்காரர்களால் கடலில் கைவிடப்பட்டிருந்த இந்த சுமார் 670 கிலோ 676 கிராம் ஐஸ் போதைப்பொருள், 156 கிலோ 542 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 12 கிலோ 036 கிராம் ஹாஷ் போதைப்பொருள் ஆகியவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டதாக கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# மாகாண சபைத் தேர்தல் அடுத்த வருடம் நிச்சயம்

மாகாணசபைத்தேர்தல்கள் அடுத்த வருடம் நடாத்தப்படும் என ஆளும்தரப்பு அறிவித்திருக்கும் நிலையில், அதனை மீளுறுதிப்படுத்தியுள்ள விவசாயம், கால்நடை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் லால் காந்த, பழைய முறைமையிலோ அல்லது புதிய முறைமையிலோ அடுத்த வருடம் மாகாணசபைத்தேர்தல் நடாத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத்தேர்தல்கள் தொடர்பில் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதன் ஊடாக அரசாங்கத்தினால் பழைய முறைமையிலேயே தேர்தல்களை நடாத்தமுடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

'எமக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கின்றது. எனவே பழைய முறைமையில் மாகாணசபைத்தேர்தல்களை நடாத்துவதற்கான சட்டத்திருத்தத்தை எம்மால் நிறைவேற்றமுடியும்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று எதிர்வரும் மாகாணசபைத்தேர்தல்களில் எதிர்க்கட்சிகளின் கூட்டணி அரசாங்கத்துக்கு சவாலாக அமையுமா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், அக்கூட்டணி தமக்கு எவ்வகையிலும் சவாலாகவோ அல்லது பிரச்சினையாகவோ அமையாது என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

'எம்மிடம் சுமுகமான முறையில் பயணிக்கும் நிறைவேற்றதிகாரம் கொண்ட அரசுத் தலைவர்யும், உரியவாறு இயக்கும் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருக்கின்றனர். புதியதொரு அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு குறித்தும், எம்மால் நிர்வகிக்கப்படும் உள்ளூராட்சிமன்றங்கள் குறித்தும் மக்களுக்கு சிறந்த புரிதல் உண்டு. ஆகையினால் எதிர்வரும் தேர்தல்களில் எமக்கு எவ்வித சவாலும் இல்லை' என அவர் தெரிவித்துள்ளார்.




FREE GIFTS
உலகத்தரம் வாய்ந்த கணினிகள்
NALIN
LAPTOPS
NALIN Information Technologies Pvt Ltd.
DIWALI MEGA OFFER
MOUSE | MOUSEPAD | BAG | 64GB PENDRIVE | POUCH | UMBRELLA | CARD READER
MEGA OFFER
3 years warranty Windows 11
3 years warranty Windows 11
M365
1 years warranty Windows 11
2 years warranty
Windows 11
2 years warranty
STARTING PRICE -RS: 137,000/=
Installment Payment Allowed
Terms & Conditions Apply
Island wide free delivery
Mon-Sat
Hp World - 077 359 4363 | Jaffna - 077 766 7975 | Exclusive - 076 359 4359
Mannar - 076 359 4368 | Kilinochchi - 076 359 7610


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.10.2025இல் வெளியிடப்பெற்றது